Deposition of Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.

Case No.CC.No. 127 / 2021

**DEPOSITION OF PROSECUTION SIDE WITNESS No.1**

| | | | |
|---|---|---|---|
| Name : | மணி | Calling: | விவசாயம் |
| Father's Name: | லட்சுமணகவுண்டர் | Religion: | இந்து |
| Village: | கொத்தகோட்டை | Age: | 55 |
| Taluk: | வாணியம்பாடி | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of Indian Evidence Act 1872 Dated : 26.07.2022

SIGN :

அ.சா.1 முதன்மை விசாரணை.

நான் கொத்தகோட்டையில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்குத் தெரியும். 11.07.2021 ம் தேதி அன்று எங்கள் நிலத்தில் உள்ள முருங்கை செடி, எலும்பச்சை செடிகளை ஆஜர் எதிரிகள் வெட்டிக்கொண்டிருந்தபோது எங்கள் வீட்டில் இருந்த பெண்கள் கேட்டதற்கு மோனிஷ் என்பவர் தனலட்சுமியை கீழே தள்ளி இரும்பு ராடை எடுத்து கழுத்தின் மீது வைத்து அழுத்தியிருக்கிறார். தகவல் அறிந்து நாங்கள் அங்கு போனோம். செடிகளை ஏன் வெட்டினீர்கள் என்று கேட்டதற்கு முருங்கை செடியை வெட்டியது போல் உன்னையும்வெட்டுவேன் என்று சொல்லி என்னை வெட்டும்போது நான் கையை தூக்கும்போது எனது வலது கையின் மீது வெட்டிவிட்டார். பின்னர் வாணியம்பாடி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு வந்தேன். அங்கு போலிசார் விசாரித்தார்கள் நான் வாக்குமூலம் கொடுத்தேன். புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். **(நான் கொடுத்த புகார் வாக்குமூலம் அசா ஆ1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை.

நான் முதல் கூறிய மேற்கண்ட தகவலைத் தான் போலிசார் விசாரணையின் போதும் கூறியிருக்கிறேன் என்றால் சரிதான். எனக்கு தமிழ் எழுதப்படிக்கத் தெரியாது என்றாலும் கையெழுத்து மட்டும் தான் போடுவேன் என்றாலும் சரிதான். அசா ஆ1 ஆவணத்தில் என்ன எழுதப்பட்டு இருக்கிறது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். மேற்படி கையெழுத்தை நான் மருத்துவமனையில் போட்டேன். நான் சொன்ன

தகவல்களை கேள்வி பதிலாக எழுதிக்கொண்டார்கள் அதன் பின்புஅதில் கையொப்பம் இட்டேன். தனலட்சுமி எனது மனைவி ஆவார். தனலட்சுமியை எதிரிகள் அடித்தபோது நான் எங்கிருந்தேன் என்றால் செக்குமேட்டில் இருந்தேன். அப்போது சிவலிங்கம், வேல்முருகன் ஆகியோர்கள் வாணியம்பாடிக்கு வந்திருந்தார்கள் என்றால் சரிதான். கோகிலா என்பவர் தான் தனலட்சுமியை அடித்தது சம்மந்தமாக எனக்கு போன் மூலம் தகவல் சொன்னார். நாங்கள் மூவரும் சம்பவத்தை கேள்விப்பட்டுதான் அந்த இடத்திற்குசென்றோம் என்றால் சரிதான். அந்த இடத்தில்இருதரப்பினருக்கும் இடையே தள்ளு , முள்ளு ஏற்பட்ட பிறகு தான் நான் புகார் கொடுத்தேன் என்றால் அவர்கள் எனது கையை வெட்டிய பிறகு தான் நான் புகார் கொடுத்தேன். யார் எனது கையை வெட்டியது என்றால் ஆனந்தன் தான் வெட்டினார். எதனால் வெட்டினார் என்றால் முருங்கை செடியும், எலும்பிச்சை செடியையும் வெட்டிய வெட்டுக்கத்தியால் வெட்டினார். வெட்டுக்கத்தி சுமார் 1 1/2 அடி நீளம் இருக்குமா என்றால் இருக்கும். அப்பொழுது வெட்டு காயத்தினால் ஏற்பட்ட ரத்த காயத்தினால் எனது சரட்டும், வேட்டியும் ரத்தத்தினால் நனைந்து விட்டது என்றால் சரிதான். போலிசார் அந்த ரத்தம் படிந்த துணியை என்னிடம் இருந்து வாங்கிக்கொண்டார்களா என்றால் பார்த்தார்கள். வாங்கிக் கொள்ளவில்லை. என்னுடன் வந்த மற்ற நபர்களுக்கு என்ன நடந்தது என்று நேரிடையாக எனக்கு தெரியுமா என்றால் நான் மருத்துவமனைக்கு வந்த பின்பு அவர்களை மடக்கி அடித்து இருக்கிறார்கள். நான் சம்பவயிடத்திற்கு இதற்கு முன்பாக எனது மனைவிக்கு என்ன நடந்தது என்பது குறித்து அவர் சொல்லி தான் எனக்கு தெரியும் என்றால் சரிதான். எந்த தேதி, எந்த வருடம் சம்பவம் நடந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரியல்ல 11.07.2021 அன்று காலை 7.30 மணியில் இருந்து 9.30 மணிக்குள்ளாக சம்பவம் நடந்தது. நான் 8.00 அல்லது 8.30 மணிக்கு சம்பவயிடத்திற்கு போய்விட்டேன். நான் மருத்துவமனைக்கு எத்தனை மணிக்கு வந்தேன் என்றால் 9.30 மணிக்கு வந்திருப்பேன். போலிசார் எத்தனை மணிக்கு என்னை சம்பவம் தொடர்பாக விசாரித்தார்கள் என்றால் இரவு 7.00, 7.30 மணி அளவில் சம்பவம் தொடர்பாக என்னை விசாரித்தார்கள். எனது மனைவியை கம்பி வைத்துஅழுத்திய சம்பவயிடத்தில் போலிசார் வந்து பார்த்தார்களா என்றால் வந்து பார்த்தார்கள். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் எங்களுடைய நிலத்தின் சர்வே எண் எனக்கு தெரியுமா என்றால் சர்வே எண் தெரியாது. ஆனால் சுமார் 50 வருடத்திற்கு மேலாக நாங்கள் தான் வைத்திருக்கிறோம். எங்களுது நிலம் எதிரிகளுடைய நிலத்திற்கு கிழக்கு பக்கம் உள்ளது. என்னுடைய நிலத்திற்கு அருகே வேப்பம்பட்டு ஏரி இருக்கிறது என்றால் சரிதான். நாங்கள் உழும் நிலமானது நீர்நிலை புறம்போக்கு என்றால் இருக்கலாம். அந்த நிலத்தின் வழியாக தான் மழை நீர் வேப்பம்பட்டு ஏரிக்கு செல்லும் என்றால் சரியல்ல. அந்த வழியாக செல்லாது. நான் நிலத்தை ஆக்கிரமித்து கொண்டதால் தான் அந்த வழியாக ஏரிக்கு நீர் செல்வது இல்லை என்றால் சரியல்ல. நான் பயன்படுத்தி வரும் நீர்நிலை நிலத்திற்கும், எதிரிகளின் நிலத்திற்கும் இடையே ஒரே வரப்பு தான் என்றால் சரிதான்.

வரப்பு சம்மந்தமாக எனக்கும் எதிரிகளுக்கும் அடிக்கடி பிரச்சனை இருந்தது வந்தது என்றால் சரிதான். எதிரி ஆனந்தன் என்பவர் நான் நீர்நிலை புறம்போக்கை ஆக்கிரமிப்பை செய்ததாக அரசு அதிகாரிகளுக்கு புகார் அனுப்பியதால் எங்களுக்கு இடையே முன்விரோதம் இருந்தது என்றால் சரிதான். நான் அனுபவித்து வரும் சொத்தான பயிர் செய்ய முடியாத நிலம் என்றால் சரியல்ல. நாங்கள் பயிர் செய்து கொண்டு தான் இருக்கிறோம். கிணற்றுக்கு அருகே தான் சம்பவம் நடந்தது என்றால் சரியல்ல அங்கு கிணறு இல்லை. எதிரிகளின் நிலத்திற்கு அருகே தான் சம்பவம் நடைபெற்றது. எதிரிகள் நிலத்திற்கும் எங்களுடைய நிலத்திற்கும் இடையே ஆலாங்காயம் செல்லும் சாலைக்கு கிழக்காக சம்பவம் நடைபெற்ற இடம் உள்ளது. போலிசார் 11.07.2021 அன்று விசாரித்தார்கள் அதற்கு பின்பு விசாரித்தார்களா என்றால் விசாரிக்கவில்லை. எதிரிகளும் அதே சமயத்தில் எனக்கு எதிராக புகார் கொடுத்து அதன் பெயரிலும் வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். எதிரிகளின் வரப்பை நாங்கள் சேதப்படுத்தியதால் இருவருக்கும் ஏற்பட்ட வாக்குவாதத்தில் நான் கீழே விழுந்ததால் எனது கையில் ஏற்பட்ட காயத்தை கொண்டு எதிரிகள் தான் வெட்டினார்கள் என்று பொய்யாக அவர்களுக்கு எதிராக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் (சாட்சி உணர்ச்சி வசப்பட்டு) நான் உண்மை தான் சொல்கிறேன். அவர்கள் வெட்டியதால் தான் காயம் ஏற்பட்டது. 11.07.2021 அன்று டாக்டர் என்னை விசாரித்தார்களா என்றால் விசாரித்தார்கள் அதன் பின்பு போலிசாருக்கு தகவல் சொல்லி போலிசாரும் என்னை விசாரித்தார்கள். வேறு யாரும் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கிற்கும் எதிரிகளுக்கும் எந்தவிதமான சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. எனக்கு இருக்கும் செல்வாக்கை பயன்படுத்தி எதிரிகளுக்கு எதிராக பொய்யாக இந்த வழக்கை தாக்கல் செய்து இருக்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

சாட்சி கையொப்பம்.
(ஒம்.) மணி

Taken down by me in open court and read over to the witness in the presence of the accused and admitted by the witness to the correct.
(Sd./-) D.Ravi,
Judicial Magistrate (FAC), Vaniyambadi.

Deposition of Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.

Case No.CC.No. 127 / 2021

**DEPOSITION OF PROSECUTION SIDE WITNESS No.2**

| Name : | தனலட்சுமி | Calling: | கூலி |
|---|---|---|---|
| Father's Name: | க/பெ. மணி | Religion: | இந்து |
| Village: | கொத்தகோட்டை | Age: | 60 |
| Taluk: | வாணியம்பாடி | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of Indian Evidence Act 1872 Dated : 26.07.2022

SIGN :

அ.சா.2 முதன்மை விசாரணை.

நான் கொத்தகோட்டையில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். அசா.1 என்னுடைய கணவர். ஆஜர் எதிரிகளை எனக்குத் தெரியும். போன வருடம் ஒரு நாள் காலை பக்கத்து நிலத்தைச் சேர்ந்த ஆனந்தன், மோனிஸ், அரவிந்த் ஆகியோர்கள் எங்கள் நிலத்தில் இருந்து எலுமிச்சை, முருங்கைச் செடிகளை வெட்டினார்கள். அதை நான் கேட்டதற்கு என்னை பிடித்து கீழே தள்ளி கழுத்தின் மீது அரவிந்த் அழுத்தினார். அரவிந்த் என்பவர் தேவிடியா, தட்டுவானி என்று அசிங்கமாக திட்டினார். எனக்கு மயக்கம் ஏற்பட்டதால் என்னுடைய மருமகள் கோகிலா எனக்கு தண்ணீர் குடப்பாட்டி என்னை வீட்டிற்கு கொண்டு சென்றார்கள். அன்று முதல் எனக்கு பேச்சு சரியாக வரவில்லை. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை.

நான் நீதிமன்றத்தில் கூறிய மேற்கண்ட தகவல்களை தான் போலிசார் விசாரணையிலும் கூறியிருக்கிறேன் என்றால் சரிதான். நான் கூறிய மேற்கண்ட தகல்களை தவிர்த்து வேறு ஏதாவதுபோலிசார் விசாரணையில் கூறியிருந்தால் அது தவறு என்றால் வேறு எதுவும் நான் சொல்லவில்லை. சம்பவம் நடந்த தேதி, மாதம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அரவிந்தன் என் கழுத்தின் மீது கம்பி வைத்து அழுத்தியதாக நான் கூறிய கம்பியை போலிசார் விசாரணையின் போது காண்பித்தேனா என்றால் காண்பித்தேன். அந்த கம்பி எவ்வளவு நீளம் இருக்கும் என்றால் சாட்சியானவர் அவருடைய கையை நீட்டி முழங்கைக்கு சிறிது நீளமாக அளவைக்குறித்து 2 விரல்

தடிமன் அளவு இருப்பதாகவும் விரல்களை காட்டி கூறினார். அப்படி அழுத்தியதால் கழுத்து பகுதியில் காயம் ஏற்பட்டு தழும்பு ஏதாவது ஏற்பட்டதா என்றால் ஏற்பட்டது என்று கழுத்தை காண்பித்து காட்டினார். எனக்கு சம்பத்திற்கு முன்பாக கழுத்தில் ஒரு ஆப்ரேசன் நடந்தது என்றால் சரிதான். அந்த இடத்தில் வைத்து தான் அழுத்தினார். அந்த வடு ஆப்ரேசன் நடந்ததால் தான் ஏற்பட்டது என்றால் சரிதான். சம்பவத்திற்கு முன்பு வரை பேச்சுவார்த்தை நன்றாக தான் இருந்தது அதன் பிறகு பேச முடியாமல் வலியும் அதிகமாக இருந்தது. அரவிந்தன் எனது கழுத்தை அழுத்திய நேரம் சுமார் 9 மணி இருக்குமா என்றால் இல்லை 7 மணி இருக்கும். எனது கணவர் மணி, சாட்சி சிவலிங்கம், வேல்முருகன் ஆகியோர்கள் எப்போது வந்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் மருத்துவமனைக்கு செல்லவில்லை என்றால சென்று தான் வந்தேன். நான் மயங்கிய நிலையில் இருந்ததால் போலிசாரிடம் வாக்குமூலம் அளிக்கவில்லை என்றால் மயக்கம் தெளிந்தவுடன் போலிசாரிடம் வாக்குமூலம் அளித்தேன். போலிசார் மருத்துவமனையில் என்னை விசாரித்து புகார் வாக்குமூலம் ஏதாவது எழுதி வாங்கினார்களா என்றால் சாட்சி அது எனக்கு தெரியவில்லை என்று பிறகு எல்லோரிடமும் கையெழுத்து வாங்கியதாக கூறுகிறார். சம்பவ தேதியில் எங்கள் நிலத்தில் கரும்பு பயிர் செய்துஇருந்தோமா என்றால் ஆமாம். கரும்பு பயிர் செய்து இருந்த இடத்தில் கிணறு இருக்கிறது என்றால் அங்கு கிணறு இல்லை ரோட்டிற்கு அந்த பக்கமாக தான் கிணறு உள்ளது. எங்களது சொத்திற்கும் எதிரிகளின் சொத்திற்கும் ஒரே வரப்பு உள்ளது என்றால் சரிதான். இந்த வரப்பு சம்மந்தமாக என் கணவருக்கும் எதிரிகளுக்கும் இடையே ஏதாவது பிரச்சனை இருந்ததா என்றால் சம்பவத்திற்கு முன்பு இல்லை. அதற்கு பின்பு தான் அடிக்கடி பிரச்சனை வந்தது. சாட்சி வெங்கடாசலம் சிவலிங்கம் என்பவரின் மைத்துனர் அவர் எங்கே வேலை செய்கிறார் என்றால் அனைவரும் கூலி வேலை தான் செய்கிறார்கள். வெங்கடாசலம் என்பவர் மருத்துவமனைக்கு வந்து எங்களை விசாரித்து விவரத்தை தெரிந்து கொண்டாரா என்றால் இல்லை. சம்பவ இடத்திலேயே அவர் இருந்தார். சம்பவத்தை கேள்விப்பட்டு தான் வெங்கடாசலம் வந்து எங்களை மருத்துவமனைக்கு அழைத்து சென்றார் என்றால் சரிதான். நாங்கள் பயிர் வைத்துக்கொண்டிருக்கும் நிலத்தின் சர்வே எண் எனக்கு தெரியாது. நாங்கள் அனுபவித்து வரும் இடம் எனது மாமனார் காலத்திற்கு முன்பாகவே எங்களது அனுபவத்தில் உள்ளது. நாங்கள் அனுபவித்து வரும் சொத்து அரசு புறம்போக்கு இடம் என்றால் நாங்கள் பீம் செலுத்தி வருகிறோம். பட்டா ஏதாவது இருக்கிறதா என்றால் எனது மாமனார்பெயரில் பட்டா இருக்கிறது. நான் பொய் சொல்கிறேன் என்றாலும் அந்த நிலம் அரசுக்கு சொந்தமான நீர் பிடிப்பு புறம்போக்கு நிலம் என்றால் சரியல்ல. என்சொத்திற்கு அருகில் வேப்பம்பட்டு ஏரி உள்ளது என்றால் சரிதான். நாங்கள் அனுபவித்து வரும் நிலத்தின் வழியாக ஏரிக்கு நீர் செல்லும் என்றாலும், தற்போது நாங்கள் ஆக்கிரமித்து விட்டதால் ஏரிக்கு நீர் செல்லவீல்லை என்றாலும் சரியல்ல. எதிரி ஆனந்தன் என்பவர் நான் நீர்நிலை புறம்போக்கை ஆக்கிரமிப்பை

செய்ததாக அரசு அதிகாரிகளுக்கு புகார் அனுப்பியதால் எங்களுக்கு இடையே முன்விரோதம் இருந்தது என்றால் சரிதான். நான் அனுபவித்து வரும் சொத்தான பயிர் செய்ய முடியாத நிலம் என்றால் சரியல்ல. நாங்கள் பயிர் செய்து கொண்டு தான் இருக்கிறோம். மேற்கண்ட கருத்து வேறுபாடு காரணமாக எதிரிகள் என் கணவர் மீது புகார் கொடுத்து வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அவர்கள் எங்கள் மீது புகார்கொடுத்ததால் நடக்காத ஒரு சம்பவத்திற்காக அவர்களுக்கு எதிராக என் வீட்டுகாரர் ஒரு புகார் கொடுத்தார் என்றால் அவர்கள் புகார் கொடுத்தார்கள் நாங்களும் புகார் கொடுத்தோம். இந்த சம்பவத்தில் எனக்கு கழுத்தில் தழும்பு எதுவும் ஏற்படவில்லை என்றாலும் அறுவை சிகிச்சையின்போது ஏற்பட்ட தழும்பை வைத்து எதிரி அழுத்தியதால் ஏற்பட்டதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் பொய் சாட்சியம் சொல்லமாட்டேன். சாட்சி உணர்ச்சி வசப்பட்டு பொய்சாட்சியம் சொல்ல எனக்கு என்ன தலைஎழுத்தா என்றும் நான் உண்மையை தான் சொல்கிறேன் என்றும் அதற்கு முன்பாக நான்றாக பேசிக்கொண்டு இருந்தேன் கழுத்தை அழுத்தியதால் பேசமுடியவில்லை. நான் எனது கணவருக்கு சாதகமாக வழக்கில் பொய் சாட்சியம்அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

சாட்சி கையொப்பம்.
(ஒம்.) தனலட்சுமி

Taken down by me in open court and read over to the witness in the presence of the accused and admitted by the witness to the correct.
(Sd./-) D.Ravi,
Judicial Magistrate (FAC), Vaniyambadi.

Deposition of Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.

Case No.CC.No. 127 / 2021

**DEPOSITION OF PROSECUTION SIDE WITNESS No.3**

| | | | |
|---|---|---|---|
| Name : | சிவலிங்கம் | Calling: | விவசாயம் |
| Father's Name: | லட்சுமணகவுண்டர் | Religion: | இந்து |
| Village: | கொத்தகோட்டை | Age: | 57 |
| Taluk: | வாணியம்பாடி | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of Indian Evidence Act 1872 Dated : 26.07.2022

SIGN :

அ.சா.3 முதன்மை விசாரணை.

நான் கொத்தகோட்டையில் குடியிருந்து விவசாயம் வேலை செய்து வருகிறேன். அசா1 என்னுடைய அண்ணா. அசா2 எனது அண்ணி ஆவார். ஆஜர் எதிரிகளை எனக்குத் தெரியும். 11.07.2021 காலை 7 மணிக்கு நான் என்னுடைய அண்ணன் மணி, என்னுடைய அண்ணன் வேல்முருகன் ஆகியோர்கள் வேப்பமரச்சாலைக்கு ஒரு விழாவிற்காக சென்றோம். அப்போது என்னுடைய அண்ணன் மருமகள் கோகிலா என்னுடைய அண்ணன் மணிக்கு போன்செய்து ஆனந்தன், மோனிஸ், அரவிந்தன் ஆகியோர்கள் 2 முருங்கை மரம், 1 எலும்பிச்சை மரம் ஆகியவற்றை எங்கள் நிலத்தில் இருந்த மரங்களை வெட்டுவதாக போன் செய்தார். செடி இருந்த எங்களின் நிலம் 3 அடி மேடாகவும், எங்களுடைய நிலம் அந்த நிலத்தின் 3 அடி கீழாகவும் இருந்தது என் அண்ணன் வந்து ஏன் இந்த மரங்களை வெடடுகிறீர்கள் என்ற கேட்டபோது ஆனந்தன் கத்தியை எடுத்து வெட்ட வரும்போது எனது அண்ணன் கையால தடுக்கும்போது வலது கையில் வெட்டு விழுந்தது. என் அண்ணனுக்கு வெட்டுப்பட்ட இடத்தில் துணியை சுற்றி வந்து வாணியம்பாடி அரசு மருத்துவமனைக்கு கொண்டுசென்றோம். எனது அண்ணனை மருத்துவமனைக்கு அழைத்து சென்று விட்டார்கள். அவருக்கு பின்பு நான், எனது அக்கா மகன் வெங்கடாசலம் என்பவருடன் வண்டியில் சென்றபோது எங்கள் நிலத்திற்கு பக்கத்தில் இருந்த ஓராவதியிடம் மடக்கி ஆன்நதன் , அரவிந்தன் மண்வெட்டியால் என்னை அடித்தார்கள். அதில் எனது வலது கை மோதிர விரல் நசுங்கி விட்டது. (சாட்சி தனது வலது கைவிரலை காட்டினார்.) அதன் பிறகு எனது மகன் வேல்முருகனை அரவிந்தன், மோனிசும் அவரது முதுகில் கம்பியால்

அடித்தார்கள். மருத்துவமனையில் சேர்ந்த பிறகு மருததுவர் காவல் நிலையத்திற்கு தகவல் சொன்ன பிறகு போலிசார் அன்று இரவு 7 மணி அளவில் வந்து விசாரித்தார்கள்.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை . இல்லை.

சாட்சி கையொப்பம்.

(ஓம்.) சிவலிங்கம்

Taken down by me in open court and read over to the witness in the presence of the accused and admitted by the witness to the correct.

(Sd./-) D.Ravi,

Judicial Magistrate (FAC), Vaniyambadi.

Deposition of Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.

Case No.CC.No. 127 / 2021

**DEPOSITION OF PROSECUTION SIDE WITNESS No.4**

| | | | |
|---|---|---|---|
| Name : | வெங்கடாசலம் | Calling: | கூலி |
| Father's Name: | சிவலிங்கம் | Religion: | இந்து |
| Village: | கொத்தகோட்டை | Age: | 40 |
| Taluk: | வாணியம்பாடி | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of Indian Evidence Act 1872 Dated : 26.07.2022

SIGN :

அ.சா.4 முதன்மை விசாரணை.

நான் கொத்தகோட்டையில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்குத் தெரியும். அசா1, 2, 3 ஆகியோர்களைத் தெரியும். அசா1 மணியின் மருமகள் கோகிலா என்னுடைய தங்கை. வழக்கமாக நான் காலையில் அங்குபோவேன். 11.07.2021 அன்று காலை ஒரு 7.15 மணிக்கு என் தங்கை வீட்டிடம் போனேன். அப்போது என்னுடைய அத்தை தனலட்சுமி அசா2 அழுது கொண்டிருந்தார்கள் அதற்கு நான் கேட்டேன் . கேட்டதற்கு ஆனந்தன், அரவிந்தன், மோனிசும் ஆகியோர்கள் தனலட்சுமியை கீழே தள்ளிவிட்டதாக சொன்னார். அப்போது ஆனந்தன் கையில் கத்தியும், மோனிஸ் கடப்பாறையும், அரவிநதன் மண்வெட்டியால் மண்ணை தள்ளி கொண்டிருந்தார். அவர் நிலத்தில் இருந்த மண்ணை வெட்டி கீழ்பக்கமாக தள்ளி கொண்டிருந்தார். அப்போது ஆனந்தனிடம் என்ன பிரச்சனை என்று நான் கேட்டேன் அதற்கு ஆனந்தன் நிலம் எனக்கு சேரவேண்டியது என்று சொன்னார். நான் அதற்கு யாரும் இல்லாமல் ஏன் பிரச்சனை இடத்தை அளந்நது கொள்ள வேண்டியது தானே என்று ஆம்பிளை இல்லாத வீட்டில் எதற்கு பிரச்சனை என்று நான் கேட்டேன். நான் பேசிக்கொண்டிருக்கும்போதே மணி, சிவலிங்கம், வேல்முருகன் ஆகியோர்கள் அங்கு வந்து விட்டார்கள். அதன் பிறகு அவர்களும், இவர்களும் பேசிக்கொண்டிருக்கும் போதே கைகலப்பு ஏற்பட்டது. நான் மோனிசும், வேலமுருகனையும் விலக்கிவிட்டேன். மோனிசம், வேல்முருகனும் கீழே விழுந்து உருண்டு பிரண்டினார்கள். ஆனந்தன் கையில் கத்தி வைத்து கொண்டிருந்தார். யாரை விலக்குவது என்று எனக்கு பதட்டம் ஆகிவிட்டது. வேல் முருகன் நெஞ்சுவலிக்கிறது என்று சொன்னார் மணியின் கையில் ரத்தம் வந்து கொண்டிருந்தது. பக்கத்து நிலத்துகாரர்கள் எல்லாம் அங்கு வந்தார்கள். அங்கிருந்த

இரண்டு இருச்சக்கர வாகனத்தில் மணி, வேல்முருகன், தனலட்சுமி ஆகியோர்களை வாணியம்பாடிஅரசு மருத்துவமனைக்கு ஏற்றி அனுப்பி வைத்தேன். சிவலிங்கத்தை நான் எனது இருச்சக்கர வாகனத்தில் அழைத்து சென்றேன். சம்பவம் நடந்த இடத்தில் இருந்து 100 மீட்டர் தொலைவில் ஒரு பிரிட்ஜ் இருந்தது. மோனிஸ் எனது வண்டியை நிற்கவைத்தார். அவர் கையில் மண்வெட்டி வைத்து இருந்தார். நான் மோனிசிடம் எல்லோரும ஆஸ்பத்திரிக்கு போய் இருக்கிறார்கள் எதுவாயிருந்தாலும் பேசித் தீரத்துக்கொள்ளலாம் என்ற சொன்னேன். மோனீஸ் சிவலிங்கத்தை மண்வெட்டியால் வெட்டுவதற்காக வந்தார். நான் பிரச்சனை வேண்டாம் என்றுசொல்லிக் கொண்டிருக்கும்போது சிவலிங்கத்தின் மார்பு துணியை பிடித்து மண்வெட்டியால் அடிக்க போகும்போது சிவலிங்கம் அதனை தடுத்த போது அவர் விரலை வெட்டி விட்டது. பிறகு ஆனந்தன் என் சட்டை துணியை பிடித்தார். அதற்கு நான் என்னை எதற்கு பிடிக்கிறாய் என்று கேட்டதற்கு அதற்கு ஆனந்தன் நீ என்ன அங்கிருந்து வந்து வேலை காட்டுகிறாய் என்று கேட்டார். அதற்கு நான் பிரச்சனை என்றால் 4 பேரு வருவார்கள் என்று சொன்னேன். ஆனந்தன் என் சட்டையில்இருந்து கையை எடுத்து விட்டார். நாங்கள் மருத்துவமனைக்கு சென்று சிவலிங்கத்தை வாணியம்பாடி அரசு மருத்துவமனையில் சேர்த்தேன். மறுநாள் காலை போலிசார் வந்து என்னை விசாரித்தார்.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை. இல்லை
சாட்சி கையொப்பம்.
(ஒம்.) வெங்கடாசலம்

Taken down by me in open court and read over to the witness in the presence of the accused and admitted by the witness to the correct.
(Sd./-) D.Ravi,
Judicial Magistrate (FAC), Vaniyambadi.